அறிமுகம்

# பயணத்திற்கு ஆயத்தம் செய்தல்

நாம் ஒரு பயணத்தை மேற்கொள்ள இருக்கிறோம். இது ஒரு மன எழுச்சியூட்டும் பயணமாக இருக்க வேண்டும், ஆனால் செல்லுதல் என்பது அவ்வப்போது கடினமாக இருக்கும். இருந்தபோதிலும், இது நீங்கள் மேற்கொண்டவற்றிலேயே மிகவும் முக்கியமான பயணமாக இருக்கலாம். நாம் ரோமருக்கு எழுதிய நிருபம் என்ற புத்தகத்தினூடே பயணம் செய்வோம்.

எந்த ஒரு கல்விப் பயணத்தையும் மேற்கொள்வதற்கு முன்பு, ஆயத்தப்படுதல் அவசியமாக உள்ளது. துணிகள் மற்றும் அவசியமான பொருள்களை எடுத்து வைக்க வேண்டும், கலந்து ஆலோசிப்பதற்கு வரைபடங்களும் இருக்க வேண்டும். அவ்வாறே, இந்தப் பாடமானது உங்களுக்கு முன்னுள்ள பயணத்திற்கு உங்களை ஆயத்தம் செய்யும். நீங்களும் நானும் ஒன்றாக மேற்கொள்ளும் வழிகாட்டப்படும் பயணத்திற்கு உங்களை ஆயத்தம் செய்தல் என்பது ஒரு இலக்காக உள்ளது. ரோமருக்கு எழுதிய நிருபத்தினூடேயான சாதனைப் பயணத்தில் உங்களுக்கு நீங்களே செய்து கொள்பவற்றிற்கு அவசியமானவற்றை உங்களுக்குத் தருதல் என்பது இன்னொரு நோக்கமாக உள்ளது.

வழிகாட்டப்படும் பயணங்கள் மற்றும் நீங்களே மேற்கொள்ளும் பயணங்கள் ஆகிய இரண்டுமே பலங்கள் மற்றும் பலவீனங்களைக் கொண்டுள்ளன. 1974ல், எனது குடும்பமும் நானும் எங்கள் சொந்த முயற்சியிலேயே ஐரோப்பிய நாடுகளில் நாற்பத்தி ஐந்து நாட்கள் பயணம் செய்தோம், நாங்கள் சென்ற நாடுகள் பலவற்றின் மொழிகளை நாங்கள் அறியாதிருந்தோம். ஐரோப்பிய நாடுகளில் ஒரு நாளைக்கு ஐந்து முதல் பத்து டாலர்கள் வரை என்ற பெயருள்ள ஒரு புத்தகமே எங்கள் அடிப்படை ஆதாரமூலமாயிருந்தது. எனது பயணக்குறிப்பிற்கு நான் “ஐரோப்பிய நாடுகளில் ஒரு நாளைக்கு ஐந்து முதல் பத்து மனக்கலக்கமூட்டும் சம்பவங்கள்” என்று தலைப்பிட்டேன். “யாரேனும் என்னை வழிநடத்த வேண்டும்” என்று நான் அடிக்கடி விரும்பினேன் (ஊக்கமாய் விரும்பினேன்). (நடபடிகள் 8:31அவைக் காணவும்.)

1989ல் எனது மனைவி ஜோவுக்கும், எனக்கும், துருக்கி நாட்டில் (“ஆசியாவிலிருந்த ஏழு சபைகளின்” இடத்தில்) மற்றும் கிரேக்கம் ஆகிய நாடுகளில், பன்னிரண்டு நாட்களுக்கு வழிகாட்டியுடன் கூடிய பயணம் அளிக்கப்பட்டது. நாங்கள் எங்கள் சொந்த முயற்சியில் ஒரு மாதத்தில் பார்த்

திருக்கக் கூடியவற்றைக் காட்டிலும் அதிகமானவற்றை அந்தப் பன்னிரண்டு நாட்களில் பார்த்தோம். இருந்தபோதிலும், எங்கள் குழுவானது ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு அவசரமாய்ப் புறப்பட்டபோது, நான் அடிக்கடி இந்த அல்லது அந்தப் பழங்கால நகரின்சிதிங்களினூடே அலைந்து திரிய ஒரு நாள் வேண்டுமென்று விரும்பினேன். நமக்குக் கூறப்பட்டுள்ளவற்றைக் கிரகிக்கவும் நாங்கள் நடந்த தெருக்களினூடே உலாவியிருந்த அப்போஸ்தலர்கள் மற்றும் ஆதிக்கிறிஸ்தவர்களைப் பற்றிச் சிந்திக்கவும் நேரம் வேண்டுமென்று ஏங்கினேன்.

இந்தப் பாடத்தொடர் ஒரு வழிகாட்டும் பயணமாக இருக்கும். உங்கள் பயண வழிகாட்டி என்ற வகையில், நான் "ஆர்வத்திற்குரிய இடங்கள்" பற்றி விவரிப்பேன். நான் இந்தப் பயணத்தை முடிந்த வரையில் மகிழ்வான அனுபவம் உள்ளதாகவும் அழுத்தங்கள் அற்றதாகவும் ஆக்க முயற்சி செய்வேன். நிலப்பரப்பு தடைசெய்வதாகவும் வழி செங்குத்தாகவும் இருக்கும்போது, ஏறிச்செல்வதில் உங்களுக்கு நான் உதவிசெய்வேன். அதேவேளையில், நீங்கள் உங்கள் சொந்தப் பயணத்தை மேற்கொண்டாக வேண்டும். ஒவ்வொரு பாடத்தின் தொடக்கத்திலும், கலந்துரையாடப்பட இருக்கும் வசனங்களை நீங்கள் காண்பீர்கள். எனது விளக்கவுரைகளை வாசிப்பதற்கு முன்னர், நீங்கள் அவ்வசனப்பகுதியைப் பலமுறை உங்களுக்கென்றே வாசியுங்கள். அதைப் பற்றிச் சிந்தியுங்கள்; அதைப் பற்றி ஜெபியுங்கள். "தொடக்க வாசகர்களுக்குப் பவுல் கூறியது என்ன?" என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். பின்பு, "இவ்வசனங்களில் தேவன் எனக்குக் கூறுவதென்ன?" என்று கேட்டுக்கொள்ளுங்கள்.

நமது ஒன்றிணைந்த பயணத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்துதல் என்பது மாத்திரமல்ல, ஆனால் கண்டுபிடிப்பிற்கான உங்கள் சொந்தப் பயணத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்துதல் என்பதும் இந்த அறிமுகப் பாடத்தின் நோக்கமாக உள்ளது. வழியில் உற்றுக்காணவேண்டிய விஷயங்களைப் பற்றிய ஆலோசனைகளையும் இந்தப் புத்தகத்தினூடே உள்ள சில பிரதான சாலைகளைப் பற்றிய புறக்குறிப்பையும் நான் கொடுப்பேன்.

## இதன் எழுத்தாளர் யார்?

பரிசுத்த ஆவியானவரே ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் தெய்வீக எழுத்தாளராக இருந்தார் (2 பேதுரு 1:21; 1 கொரிந்தியர் 2:4, 10, 13 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்). 1:1ல் இதை (ஆவியானவரால் ஏவப்பட்டு) எழுதிய மனித எழுத்தாளரின் பெயர் குறிப்பிடப்படுகிறது: "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்." அப்போஸ்தலரான பவுல் இந்தப் புத்தகத்தை எழுதினார் என்பதை எந்த ஒரு பழங்காலத்திய கல்வி யாளரும் மறுப்பதில்லை என்று நான் அறிவேன். விமர்சகர்கள்கூட, பவுல் என்ற ஒருநபர் இருந்தார், அவர் சில நிருபங்களை எழுதினார் என்றும், அவற்றில் ரோமருக்கு எழுதின நிருபம் என்பதும் ஒன்றாகும் என்றும்

ஒப்புக்கொள்கின்றனர். சார்லஸ் ஹோட்ஜ் அவர்கள், "இந்த நிருபத்தை எழுதியவர் பற்றிய உறுதித்தன்மையைக் காட்டிலும் ... அதிகமான உறுதித்தன்மையுடைய பழங்காலப் புத்தகம் வேறு எதுவுமில்லை" என்று எழுதினார்.[1]

இந்த நிருபம் பவுலினால் கூறப்பட்டு, தெர்தியு என்பவரால் எழுதப் பட்டது என்பது உறுதி, ஏனென்றால் அவர் தமது சொந்த வாழ்த்துக்களை இந்நிருபத்தின் முடிவுக்கு அண்மையில் நுழைத்துள்ளார் (16:22). இது அனேகமாக, பெபேயாள் என்ற கிறிஸ்தவப் பெண்ணினால் ரோமாபுரிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் (16:1, 2ஐக் காணவும்). அந்நாட்களில், நாம் இன்றைய நாட்களில் கொண்டுள்ளது போன்று அஞ்சல் சேவை இருந்ததில்லை. அரசாங்க விஷயங்களுக்கு அஞ்சல்பணியாளர்கள் இருந்தனர், ஆனால் சாதாரண மக்கள் தங்களால் இயன்ற அளவு சிறந்ததைச் செய்தனர். அவர்கள் நண்பர்களின் மூலமாகவோ அல்லது தாங்கள் விரும்பும் அடைவிடங்களுக்குப் பயணப்படும் பழக்கப்பட்டவர்கள் மூலமாகவோ கடிதங்களை அனுப்பினர்.

## இதைப் பெற்றுக்கொண்டவர்கள் யார்?

இதைப் பெற்றுக்கொண்டவர்கள் 1:2ல் பெயர் குறிப்பிடப்படு கின்றனர்: "ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும்." மீண்டும் ஒருமுறை, நாம் கருத்து ஒருமைப்பாட்டைக் கொண்டுள்ளோம்: இந்த நிருபம் ரோமாபுரியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. சபை என்பது (கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட) கிறிஸ்தவர்களின் கூட்டம் அடங்கிய அமைப்பு என்பதைவிட அதிகமான அல்லது குறைவான விஷயம் எதுவும் இல்லை என்பதால், இந்த நிருபமானது ரோமாபுரியில் இருந்த "சபைக்கு" - அல்லது அந்த நகரத்தில் பல்வேறு இடங்களில் கூடிவந்த "வீடுகளில் இருந்த சபைகளுக்கு" (சபைக்குழுமங்களுக்கு) - எழுதப்பட்டிருக்கும் என்று நாம் நினைக்கலாம் (ரோமர் 16:3, 5அ ஆகிய வசனங்களைக் காணவும்). எனது குறிப்புரைகளில், நான் சிலவேளைகளில் "ரோமாபுரியில் இருந்த சபை" என்று குறிப்பிடுவது, ரோமாபுரியில் வாழ்ந்த எல்லாக் கிறிஸ்தவர்களையும் குறிப்பிடும் ஒரு எளிய வழிமுறையாகும்.

### ரோமாபுரியில் இருந்த சபை

ரோமாபுரி என்பது உலகத்தின் மிகப்பெரிய நகரமாக, பிரிட்டனில் இருந்து அரேபியா வரை பரந்து விரிந்திருந்த வல்லமை வாய்ந்த ரோமப்பேரரசின் தலைநகராக இருந்தது. அமெரிக்க நாட்டில் வாழ்பவர்கள் அதை இன்றைய நாட்களின் நியூயார்க் நகருக்கு ஒப்பாக நினைத்துப் பார்க்கலாம். நீங்கள் கிரேட் பிரிட்டனில் வாழ்பவர் என்றால், "நியூயார்க் நகருக்கு" பதிலாக "லண்டன்" நகரை நினையுங்கள். நீங்கள் ஜப்பானில் வாழ்பவர் என்றால், "டோக்கியோ" பற்றி நினையுங்கள். நீங்கள் எங்கு வாழ்பவராக இருப்பினும், அரசியல், நிதிநிலை, அல்லது சமூகநிலை மைய அச்சாகக் கருதப்படக்கூடிய நகரம் ஒன்று அங்கிருக்கும்.

*“எல்லாச் சாலைகளும் ரோமாபுரியை நோக்கியே செல்லுகின்றன” என்ற சொல்வழக்கு பவுலின் காலத்தில் இருந்தது. ரோமருக்கு இந்த நிருபம் எழுதப்பட்ட வேளையில், நீரோ என்பவன் அரியணையில் வீற்றிருந்தான் மற்றும் பேரரசு தனது மகிமை மற்றும் வல்லமையின் உச்சத்திலிருந்தது.*

*ரோமாபுரியில் சபை எவ்வாறு அல்லது எப்போது நிலைநாட்டப் பட்டது என்பதை நாம் அறிவது இல்லை. பேதுரு அங்கு சபையை நிலைநாட்டினார் என்றும் அவர் தம் மரணம் வரையில் இருபத்து ஐந்து ஆண்டுகள் அதன் மூப்பராக ஊழியம் செய்தார் என்றும் கத்தோலிக்க சபை நம்புகிறது. சபையின் தொடக்க நாட்களில் பேதுரு ரோமாபுரியில் இருந்தார் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லாதிருக்கையில், அந்த நம்பிக்கைக்கு நேர்மாறான சாட்சியம் அதிகமாக உள்ளது. உதாரணமாக, ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் முடிவில், ரோமாபுரியில் தாம் அறிந்திருந்தவர் களைப் பவுல் வாழ்த்தும்போது (16:3-15), அவர் பேதுருவைக் குறிப்பிட வில்லை - ஆனால் அவர் பல சந்தர்ப்பங்களில் பேதுருவைச் சந்தித்திருந்தார் (உதாரணமாக, நடபடிகள் 15:7, 12ஐக் காணவும்). மேலும் பவுல் ரோமா புரியில் தாம் முதலில் சிறைப்பட்டிருந்த நாட்களில் அங்கிருந்து எழுதிய நிருபங்களிலோ (எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன்) அல்லது தமது இரண்டாம் சிறையிருப்பின்போது எழுதிய நிருபத்திலோ (2 தீமோத்தேயு; 4:11அவைக் கவனிக்கவும்)கூட அவர் பேதுருவைப் பற்றிக் குறிப்பிடவில்லை.*

*என்ன நடந்திருக்கலாம் என்பதைக் கூறுவதற்கு நான் சில வரலாற்று உண்மைகளை வரிசைப்படுத்திக்கூற என்னை அனுமதியுங்கள். ரோமா புரியில் கணிசமான அளவுக்கு யூத மக்கள் தொகை இருந்தது. ரோம ஜெனரலான பாம்ப்பே என்பவர் யூத நாட்டை வெற்றிகொண்டு எருசலேமைப் பிடித்தபோது, யூதகைதிகளில் பலர் ரோமாபுரிக்கு அடிமைகளாக அனுப்பப்பட்டனர். மோசேயின் நியாயப்பிரமாணத்தை அவர்கள் கண்டிப்பாகக் கடைப்பிடித்தல் என்பது அவர்களைத் தகுதி யான அடிமைகள் என்பதற்குக் குறைவாக்கிற்று. கடைசியில், அவர்களின் முதலாளிகள் அவர்களை விடுவித்து தைபர் நதிக்கு அப்புறத்தில் அவர்கள் தங்குவதற்கு இடத்தைக் கொடுத்தனர். அந்தப் பகுதியானது பிரபலமற்ற தாக இருந்தது, ஆனால் அங்கு யூதர்கள் உயிர்பிழைத்து நிலைத்திருந்தனர். D. D. வெடன் என்பவர், “ஓய்வு நாட்களில் அவர்களின் ஜெப ஆலயங்கள், இளைஞர்கள் ரோமாபுரியின் அழகு மற்றும் நடைமுறைப் பாணி ஆகியவற்றின் காட்சியைப் பெறுவதற்கு அங்கு செல்லும்படி ஒரு கவிஞர் பரிந்துரைக்கும் அளவுக்கு ரோமானியப் பெண்களால் நிறைந்திருந்தது!” என்று எழுதினார்.[2]*

*நடபடிகள் 2:10ல் விவரிக்கப்பட்டுள்ள பெந்தெகொஸ்தே என்ற யூதர்களின் பண்டிகைக்காக ரோமாபுரியில் இருந்து யூதர்கள் எருசலேமுக்குப் பயணம் சென்றனர். ஒருவேளை அவர்களில் சிலர் மனமாற்றப்பட்டு, சபை சிதறடிக்கப்பட்ட பின்பு (நடபடிகள் 8:1), தங்களுடன் நற்செய்தியை எடுத்துக்கொண்டு, ரோமாபுரிக்குத் திரும்பியிருக்கலாம் (நடபடிகள் 8:4). கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்படுவதற்கு முன்புகூட,*

ஒருசிலர்மீது அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து (நடபடிகள் 8:17, 18ஐக் காணவும்), அவர்கள் தங்கள் சொந்தத்திலேயே செயல்பட உதவுவதற்கு அற்புத அறிவை அவர்களுக்குக் கொடுத்திருக்கவும் வாய்ப்பு உண்டு. தீர்க்கதரிசன வரம் பெற்றவர்கள், அல்லது ஏவுதல் பெற்று பிரசங்கித்தவர்கள் போதனையின் மூலமாக இந்த அற்புத அறிவு பரவிற்று என்பது ஒரு வகையாக இருந்தது (ரோமர் 12:6).

பவுலினால் மனமாற்றம் அடைந்தவர்களில் சிலர் ரோமாபுரிக்குச் சென்று அங்கு சபையை நிலைநாட்டியிருக்கலாம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. (ரோமர் 16ல் பவுலுக்குப் பழக்கப்பட்டவர்களின் பட்டியலைக் காணவும்.) அந்த நகருக்கும் அதிலிருந்த மற்ற இடங்களுக்கும் போக்குவரத்து தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருந்தது. பயணிகளில், பவுலினால் மனமாற்றம் அடைந்தவர்கள் பலரும் உள்ளடங்கி இருந்தனர் என்பதில் ஐயமில்லை, மற்றும் அவர்களில் சிலர்மீது பவுல் தமது கைகளை வைத்து (நடபடிகள் 19:1-7), அவர்களுக்கு அற்புத வல்லமைகளைக் கொடுத்திருக்கலாம்.

ரோமாபுரியில் சபை எப்படியிருப்பினும் மற்றும் எப்போது நிலை நாட்டப்பட்டிருப்பினும், கி.பி. 49 அல்லது 50லேயே கிறிஸ்து அந்நகரில் அறியப்பட்டிருந்தார் என்பதைப் பதிவு ஒன்று சுட்டிக்காண்பிக்கிறது. வெடன் என்பவர், "நகராட்சியானது கிறிஸ்து என்ற பெயரின் மாறுதல் என்று தெளிவாய்க் காணப்பட்டதான கிறெஸ்டஸ் என்ற நபரின் பெயர் மூலமாகக் கலகம் விளைந்தது என்று தகவல் பெறும் அளவுக்கு அதைக் கவர்ந்திழுக்குமாறு யூதர்களின் மத்தியில் அவ்வளவு பெரிய கலவரம் (கி.பி. சுமார் 50ல்) எழுந்தது" என்று எழுதினார்.[3] அவ்வேளையில் 50களின் மத்திக்கும் 50களின் கடைசிக்கும் இடைப்பட்ட காலவேளையில் பவுல் ரோமருக்கு நிருபத்தை எழுதினார், எனவே அந்தக் காலகட்டத்தில் அங்கு சபை உயிருடனும் செயல் துடிப்புடனும் இருந்தது (ரோமர் 1:8ஐக் காணவும்).

### யூதர்கள் அல்லது புறஜாதியார்

ரோமாபுரியில் இருந்த சபையில் யூதர்கள் மிகுதியும் இருந்தனரா, புறஜாதியார் பிரதானமாய் இருந்தனரா, அல்லது இவ்விருசாராரும் கலந்திருந்தனரா என்பது சிலர் அக்கறை கொள்ளுகிற கேள்வியாக உள்ளது. நிருபத்தில், பவுல் புறஜாதியாரையே தொடக்கத்தில் குறிப்பிட்டார்: "சகோதரரே, புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே நான் பலனை அடைந்ததுபோல உங்களுக்குள்ளும் சில பலனை அடையும்படிக்கு, உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன்" (1:13; 15:15, 16ஐயும் காணவும்). இருப்பினும், மற்ற வசனப்பகுதிகள் யூதர்களுக்கு எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக, பவுல், "நீ யூதனென்று பெயர்பெற்று" என்று எழுதிவிட்டு பின்பு கூடுதலாக, "தேவனுடைய நாமம் புறஜாதிகளுக் குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே" என்றும் எழுதினார் (2:17, 24; 4:1ஐயும் காணவும்). இந்த சூழ்நிலையானது, தனக்கு முன்பாக இரு தனிநபர்கள் நிற்கக் காணும் ஒரு மனிதருடன் ஒப்பிடப்படலாம்.

*சிலவேளைகளில் அவர் முதலாம் நபருக்குத் தமது குறிப்புகளை உரைக்கிறார், மற்றும் சிலவேளைகளில் அவர் இரண்டாம் நபருக்குத் தமது குறிப்புகளை உரைக்கிறார்.*

*சபையில் புறஜாதியார் மற்றும் யூத உறுப்பினர்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தனர் என்பதே உண்மையாகும், ஆனால் மிகச்சரியான சதவிகிதம் முக்கியத்துவமற்றதாக உள்ளது. ரோமாபுரியில் இருந்த சபையானது யூத உறுப்பினர்களைக் காட்டிலும் அதிகமான அளவில் புறஜாதியாரை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கச் சாத்தியம் உண்டு. கி.பி. 49 அல்லது 50ல் யூதர்கள் ரோமாபுரியில் இருந்து வெளியேற்றப்பட்டனர் (நடபடிகள் 18:2ஐக் காணவும்). இது அனேகமாக யூதக்கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கியிருக்கும் - எனவே அவ்வேளையில் புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களானவர்களே ரோமாபுரியில் இருந்த சபையில் விட்டு வைக்கப்பட்டிருக்கலாம். தடை தளர்த்தப்பட்டபோது, வெளியேற்றப் பட்டவர்களில் சிலர் திரும்பி வந்திருக்கலாம் (நடபடிகள் 18:2 மற்றும் ரோமர் 16:3ஐக் காணவும்); ஆனால் இவ்வேளையில், சபையில் புறஜாதியார் அதிக அளவில் இருந்திருப்பார்கள்.*

*இந்த முடிவானது இந்த நிருபத்தின் தொடக்கத்தில் பவுல் புறஜாதி யாரைக் குறிப்பிடுவதுடன் ஒத்துப்போகும் (ரோமர் 1:13). மற்றும், இது ரோமர் 16ல் உள்ள இருபத்தியெட்டுப் பெயர்களில் இரண்டு மாத்திரமே, யூதருக்கே உரிய தனிப்பட்ட பெயர்களாக இருப்பது ஏன் என்பதை விளக்க உதவும். கூடுதலாக, நடபடிகள் 28:17-22 வசனப்பகுதியானது, ரோமாபுரியில் பவுல் சிறையிடப்படுவதற்கு முற்பட்ட காலத்தில், அங்கு யூதருக்குச் சுவிசேஷ ஊழியம் எல்லைக்கு உட்பட்ட நிலையில் இருந்தது என்றும் சுட்டிக்காண்பிக்கிறது.*

### *ரோமாபுரியில் இருந்த சபையுடன் பவுலுக்கு இருந்த உறவு*

*சிலர் ரோமாபுரியில் இருந்த சபையுடன் பவுலுக்கு இருந்த உறவுடனும் போராடுகின்றனர். கத்தோலிக்கர்கள் (தங்களின் முதல் போப் என்று கருதும்) பேதுரு (தங்களின் உரிமை கோருதலின்படி) ரோமாபுரியில் இருக்கையில் இந்த நிருபத்தை எழுதப் பவுல் கொண்டிருந்த அதிகாரத்துவம் என்ன என்று வியப்படைகின்றனர். நம்பிக்கையற்றவர்கள், "பவுல் வேறெந்த ஒருவரைக்காட்டிலும் மாறுபட்டிராதபோது இப்படிப்பட்ட நிருபத்தை எழுத அவர் கொண்டிருந்த உரிமை என்ன?" என்று கேட்கின்றனர். மதத்தில் வேதாகமத்தைத் தங்கள் அதிகாரத்துவமாக ஏற்றுக் கொண்டவர்கள், ரோமாபுரியில் இருந்த சபையுடன் பவுல் கொண்டிருந்த உறவைப் புரிந்துகொள்வதில் பிரச்சனை எதுவும் கொண்டிருப்பதில்லை. கிறிஸ்து பவுலை புறஜாதியாருக்கு அப்போஸ்தலராக நியமித்திருந்தார் (நடபடிகள் 26:16-18). மிகவும் முக்கியமான புறஜாதியாரின் நகரங்களுக்கு அவரது கவனம் திரும்புதல் என்பது காலத்தைச் சார்ந்ததாக மாத்திரமே இருந்தது (ரோமர் 1:5, 9-11ஐக் காணவும்).*

# இந்தப் புத்தகம் எங்கே? மற்றும் எப்போது எழுதப்பட்டது?

*நாள்வரிசைப்படியான மதிப்பாய்வு*

*நாள்வரிசைப்படியான மதிப்பாய்வு ஒன்று ரோமருக்கு எழுதப்பட்ட நிருபம் எங்கே மற்றும் எப்போது எழுதப்பட்டது என்பதை மிகச்சரியாய்க் குறிப்பிட நமக்கு உதவக்கூடும். நமது மதிப்பாய்வை நாம் பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பயணத்தில் இருந்து தொடங்குகிறோம். கலாத்தியா, பிரிகியா நாடுகளுக்குச் சென்றபின்பு, அவர் எபேசு நகருக்கு வந்தார் (நடபடிகள் 18:23; 19:1). அங்கிருக்கையில், அவர் ரோமாபுரி செல்வதற்குத் திட்டங்கள் வகுத்தார்: "... பவுல் மக்கெதோனியா அகாயா என்னும் நாடுகளில் சுற்றிநடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிருணயம் பண்ணிக்கொண்டு: நான் அங்கே போனபின்பு ரோமாபுரியையும் பார்க்க வேண்டியதென்று சொல்லி" (நடபடிகள் 19:21).*

*எபேசுவில் கலகம் எழுந்த பின்பு (நடபடிகள் 19:23-41), பவுல் மக்கெதோனியாவுக்குச் சென்றார் (20:1), அங்கே அவர் கோடைகாலத்தையும் பனிக்காலத்தையும் செலவிட்டார். பின்பு குளிர்கால மாதங்களுக்கு அவர் கிரேக்கத்திற்கு - விசேஷமாகக் கொரிந்து நகருக்கு - சென்றார் (நடபடிகள் 20:2, 3; 1 கொரிந்தியர் 16:6ஐக் காணவும்). கொரிந்துவில் இருந்து, அவர் எருசலேமில் இருந்த ஏழைக் கிறிஸ்வர்களுக்கான தர்மப் பணத்துடன் எருசலேமுக்குப் பயணமானார் (1 கொரிந்தியர் 16:1-4ஐக் காணவும்).*

*கொரிந்து நகரில் இருந்து - கி.பி. 57 அல்லது 58ம் ஆண்டுவாக்கில்*

*பவுல் கொரிந்து நகரத்தில் மூன்று மாதங்கள் தங்கியிருந்தபோது ரோமருக்கு நிருபம் எழுதப்பட்டது என்று பெரும்பான்மையான எழுத்தாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். அத்துடன் கூடுதலாக, பெரும்பான்மையான எழுத்தாளர்கள், இந்தத் தங்குதல் கி.பி. 57 அல்லது 58ல் நடந்தது என்றும் தேதியிடுவார்கள். [எனவே] ரோமருக்கு இந்த நிருபம் கொரிந்து நகரில் இருந்து, இந்தப் பயணத்தின் கடைசியில் எழுதப்பட்டது என்ற முடிவானது ரோமர் 15ல் புறக்குறிப்பிடப்பட்டுள்ள பவுலின் திட்டங்களுடன் ஒத்துப்போகிறது:*

> *இப்பொழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யுங்காரியமாக நான் எருசலேமுக்குப் பிரயாணம்பண்ண எத்தனமாயிருக்கிறேன். மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள் சகாயம் செய்ய விருப்பங்கொண்டிருக்கிறார்கள்; ... இந்தக் காரியத்தை நான் நிறைவேற்றி[ய], ... பின்பு, உங்கள் ஊர் வழியாய் ஸ்பானியாவுக்குப் போவேன் (வசனங்கள் 25-28).*

இந்த நிருபத்தின் கடைசிக்கு அண்மையில் மூன்று தனிநபர்கள் குறிப்பிடப்படுதலின் மூலம் இந்த முடிவு மறுவலிவூட்டப்பட்டுள்ளது. முதலாவது, இந்த நிருபத்தை ரோமாபுரிக்கு எடுத்துச் சென்ற பெபேயாள் என்ற பெண்மணியாவார்: "கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை ... உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன்" (16:1, 2). கெங்கிரேயா என்பது கொரிந்து நகரத்தின் கிழக்குத் துறைமுக மாக இருந்தது. மற்ற இரு தனிநபர்கள் 16:23ல் குறிப்பிடப்பட்டுள்ளனர்: "என்னையும் சபையனைத்தையும் உபசரித்துவருகிற காயு உங்களை வாழ்த்துகிறான். பட்டணத்து உக்கிராணக்காரனாகிய ஏரஸ்தும், ... உங்களை வாழ்த்துகிறார்கள்." காயு என்னும் பெயர்கொண்ட ஒரு மனிதர் கொரிந்து நகரில் பவுலினால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார் (1 கொரிந்தியர் 1:14). நடபடிகள் 19:22 மற்றும் 2 தீமோத்தேயு 4:20ல், எரஸ்து என்னும் பெயர்கொண்ட ஒரு மனிதர் கொரிந்துவில் இருந்ததாக அடையாளப்படுத்தப்படுகிறார். (பிற்பாடு, நாம் எரஸ்து என்னும் பெயர்கொண்ட நகர அலுவலர் ஒருவரைக் குறிப்பிடுகிற, பழங்காலக் கொரிந்து நகரின் சிதிலங்களில் உள்ள கல்வெட்டு ஒன்றைக் குறித்துக் கலந்துரையாடுவோம்.)

**நாள்வரிசைப்படியான மதிப்பாய்வு தொடர்கிறது**

பவுலின் பயணங்களில் நாம் இன்னும் சற்று தூரம் செல்வோம்; இது நமக்கு பவுல் ரோமாபுரியாருக்கு இந்த நிருபத்தை எழுதுகையில், அந்த அப்போஸ்தலரின் சிந்தனையின் உட்கண்ணோக்கைத் தரலாம். பவுல் எருசலேமுக்குச் சென்ற பயணத்தில், அவர் எபேசு சபையின் மூப்பர்களைச் சந்தித்தார் (நடபடிகள் 20:17, 18). அவர்களுக்கு அவர் பின்வருமாறு கூறினார்,

> இப்பொழுதும் நான் ... எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந் தோறும் தெரிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராண னையும் அருமையாக எண்ணேன்; ... (வசனங்கள் 22-24).

நடபடிகள் 21ல், நாம் பரிசுத்த ஆவியானவர் "ஒவ்வொரு பட்டணத் திலும் உறுதியுடன் சாட்சியளித்துக்கொண்டு" இருந்தார் என்பதை அறிகிறோம். பவுல் செசரியாவை அடைந்தபோது, யூதேயாவில் இருந்து வந்த தீர்க்கதரிசி ஒருவர் பவுலினுடைய கச்சையை எடுத்துத் தமது கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு, " 'இந்தக் கச்சையுடைய வனை எருசலேமிலுள்ள யூதர்கள் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதி யார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார்' " என்று கூறினார் (வசனம் 11). அங்கிருந்தவர்கள் பவுலை எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டனர் (வசனம் 12), ஆனால் அவர், "எருசலேமில் இயேசுவின் நாமத்திற்காகக்

கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்" என்று பதில் உரைத்தார் (வசனம் 13). இவ்வசனப்பகுதிகளை நான் வாசிக்கையில், பவுல் தாம் ஒருக்காலும் ரோமாபுரிக்குச் சென்று சேர வாய்ப்பில்லை என்று நினைத்தார் என்ற மனப்பதிவை நான் பெறுகிறேன். ரோமாபுரியாருக்கு நிருபம் எழுதுவதற்குப் பவுலின் நோக்கங்களைப் பற்றி நாம் கலந்துரையாடுகையில், இதை மனதில் வைத்திருங்கள்.

பவுல் எருசலேமில் சிறைப்பிடிக்கப்பட்ட பின்பு (வசனம் 30), கர்த்தர் அவருக்குத் தரிசனமாகி, "பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்க வேண்டும்" என்று உரைத்தார் (நடபடிகள் 23:11). இது பவுல் தமது பயணத்திட்டம் கைகூடும் என்பதற்குப் பெற்றுக்கொண்ட முதல் உறுதிப்பாடாக இருக்கலாம். பல ஆண்டுகளுக்குப் பின்பு, பவுல் ரோமா புரியை அடைந்தார் (நடபடிகள் 28:16) - அவர் திட்டமிட்டபடி, ஒரு சுவிசேஷ ஊழியக்காரனாக அல்ல, ஆனால் தமது உயிருக்காக வழக்காட வேண்டிய நிலையில் அவர் அங்கு சென்றார்.

## இந்த நிருபத்தின் எழுத்து நடை மற்றும் வேதாகமத்தில் இது வைக்கப்பட்டுள்ள இடம் பற்றிய விஷயங்கள் என்ன?

### இதன் எழுத்து நடை என்ன?

ரோமருக்கு எழுதப்பட்ட நிருபம் ஒரு கடிதமாகவே உள்ளது, ஆனால் இது ஒரு சாதாரணக்கடிதம் அல்ல. இது ஒரு ஒப்பந்தத்தைத் தன்னுள் கொண்டுள்ள கடிதம், அல்லது ஒரு ஒப்பந்தம் பொதியப்பட்ட கடிதம் என்று நினைக்கப்படலாம். இது அந்நாட்களில் இருந்த கடித வடிவத்தை - ஒரு வாழ்த்து, ஒரு முடிவுரை முதலியனவற்றை - பின்பற்றும் காரணத்தால் ஒரு கடிதமாக உள்ளது. இது பாடக்கருத்து ஒன்றைப் பற்றி முறையாக, ஒழுங்குபடுத்தப்பட்ட ஒப்பந்தமாகவும் உள்ளது.

### இது பவுலின் எழுத்துக்களில் முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது ஏன்?

அப்போஸ்தலருடைய நடபடிகளுக்குப் பின்பு, உடனடியாக பவுலின் எழுத்துக்களில் ரோமருக்கு எழுதப்பட்ட நிருபம் முதலாவதாகக் காணப் படுவது ஏன்? ரோமருக்கு எழுதிய நிருபம் பவுல் எழுதிய முதல் நிருபமல்ல. இதற்கு முன்பு, அவர் 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர், 1 மற்றும் 2 கொரிந்தியர், மற்றும் கலாத்தியர் ஆகிய நிருபங்களை எழுதியிருந்தார். ரோமருக்கு எழுதிய நிருபம் அவர் எழுதிய ஆறாவது நிருபம் ஆகும் - அதாவது, குறைந்தபட்சம் நமக்காகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள அவருடைய ஆறாவது நிருபம் ஆகும். பின்பு, ஏன், இந்த நிருபம் முதலிடத்தில் வைக்கப்பட்டது? ரோம ருக்கு எழுதிய நிருபம் அவரது நிருபங்களிலேயே மிகவும் நீண்டது என்பதால் இவ்வாறு வைக்கப்பட்டது என்று சிலர் நம்புகின்றனர்,[4] ஆனால்

*நீளம் மாத்திரமே முழுமையான ஒரே காரணியாக இருக்கவில்லை என்பது நிச்சயம். ரோமருக்கு எழுதிய நிருபம் பவுலின் மிகச்சிறந்த படைப்பு என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ரோமருக்கு எழுதிய நிருபத்தில் கலந்துரையாடப்பட்ட பாடக் கருத்துக்களைக் கையாளுவதற்குப் பவுல் (ஆவியானவரின் வழிநடத்துதலின்கீழ்) தமது மனநிலை மற்றும் ஆவிக்குரிய திறன்களின் உச்சக் கட்டத்தில் இருந்தார்.*

*ரோமருக்கு எழுதிய நிருபம் தர்க்கரீதியாக அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தைப் பின்தொடருகிறது. டேவ் மில்லர் என்பவர், "நடபடிகள் இரட்சிப்பின் நிபந்தனைகளைக் கொடுக்கிறது; ரோமருக்கு எழுதிய நிருபம் இரட்சிப்பின் தளங்களைக் கொடுக்கிறது. ரோமருக்கு எழுதிய நிருபம் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பாகக் கூறு வதற்காக எழுதப்படவில்லை. நடபடிகள் 'என்ன' என்பதை உங்களுக்குக் கூறுகிறது; ரோமருக்கு எழுதிய நிருபம் 'எவ்வாறு' மற்றும் 'ஏன்' என்பதை உங்களுக்குக் கூறுகிறது" என்று எடுத்துரைத்தார்.*[5]

## *இது மதச்சட்டநூலைச் சார்ந்ததா?*

*"மதச்சட்டநூல்"* ["canon"] *என்பது "சட்டம்" என்று அர்த்தப்படுகிற லத்தீன் வார்த்தையில் இருந்து வந்து, இது "அளவுக்குச்சி அல்லது கோல்" என்பதைக் குறிக்கும் kanon என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து எடுக்கப் பட்டது. வேதவசனத்தின்* "canon" *என்பது "அளவையிடப்பட்ட" அதாவது, "சோதனையில் தேறிய" புத்தகங்களைக் குறிக்கிறது மற்றும் இவைகள் தேவனுடைய ஏவுதல் பெற்ற வசனத்தில் மதிப்புடைய பகுதிகளாகக் கருதப்படுகின்றன. ரோமருக்கு எழுதிய நிருபம் புதிய ஏற்பாட்டில் இருக்க உரிமை கொண்டுள்ளதா? மீண்டும், ஒரு கருத்து ஒருமைப்பாடு உள்ளது. ரோமருக்கு எழுதிய நிருபம் (அந்த உரிமைப்பெயருடன்) எப்போதுமே மதச்சட்ட நூலில் கேள்வியற்ற இடம் கொண்டுள்ளது. தொடக்ககாலத்தில் ஏவுதல் பெற்றிராத கிறிஸ்தவ எழுத்தாளர்கள், கி.பி. 90 என்ற தொடக்க நாட்களிலேயே பவுலின் நிருபங்கள் சுற்றுக்கு விடப்பட்டிருந்ததாகச் சுட்டிக்காண்பிக்கின்றனர்.*

## *தற்போதைய வசனங்கள் அடங்கிய பகுதி அதிகாரத்துவம் உள்ளதாக இருக்கிறதா?*

*ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றி வசனரீதியான பல கேள்விகள் எழுந்துள்ளன. உதாரணமாக, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் தொடக்க காலப் பிரதிகள் சிலவற்றின் முதல் அதிகாரத்தில் "ரோமாபுரி" என்ற வார்த்தை இருப்பதில்லை, மற்றும் சில பிரதிகளில் முடிவு அதிகாரம் அல்லது அதிகாரங்கள் இருப்பதில்லை. இது இந்த நிருபம் தனிப்பட்டவர்களைப் பற்றிய குறிப்புகள் எதுவுமின்றி சில பகுதிகளில் சுற்றுக்கு விடப்பட் டிருந்ததைச் சுட்டிக்காண்பிக்கலாம். இருப்பினும், புதிய ஏற்பாட்டில் நாம் கொண்டுள்ள இந்நிருபத்தின் பதினாறு அதிகாரங்களும் "பவுல் ரோமா புரிக் கிறிஸ்தவர்களுக்கு எழுதிய மூலவசனமாக நிலைபெற்றுள்ளன" என்று கல்வியாளர்கள் பொதுவாக ஒப்புக்கொள்கின்றனர்.*[6]

## இதன் நோக்கம் என்னவாக இருந்தது?

பவுல் இந்த நிருபத்தை எழுதக் குறைந்தபட்சம் மூன்று காரணங்களைக் குறிப்பிட்டார்:

(1) ஒரு தனிப்பட்ட காரணம்: அவரது வருகையை அறிவிக்க (1:11, 15).
(2) ஒரு இறையியல் காரணம்: சுவிசேஷத்தின் அடிப்படைத் தன்மைகளை மறுகண்ணோட்டம் இடுதல் மற்றும் தெளிவாக்குதல் (15:15).
(3) ஒரு நிதிநிலை காரணம்: ஸ்பானியா நாட்டிற்குப் பயணம் செல்வதற்கான திட்டத்திற்கு உதவி திரட்டுதல் (15:22-24, 28).

இந்த நிருபத்தை உண்டாக்குவதில், பல காரணிகள் ஈடுபடுத்தப்பட்டன என்பதில் சந்தேகம் இல்லை - ஆனால் இந்தக் கடிதத்திற்கான முதன்மை நோக்கமே நமது ஆர்வத்திற்குரியதாக உள்ளது.

முதலாவது, கலாத்தியர் மற்றும் பிற நிருபங்களைப் போன்று, இந்தப் புத்தகம் பவுலினால் தம்மை யூதமதப் போதகர்களிடமிருந்து தற்காத்துக் கொள்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டு எழுதப்படவில்லை. இந்த கள்ளப்போதகர்களின் தவிர்க்க இயலாத வருகைக்கு எதிராக ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களைத் தயார் செய்யப் பவுல் விரும்பியிருக்கலாம், ஆனால் அவர்கள் ஏற்கனவே ரோமாபுரிக்கு வந்து சேர்ந்திருந்தனர் என்பதற்கான குறிப்பு எதுவும் இதில் இல்லை.

மேலும், ரோமருக்கு எழுதிய நிருபம் ஒரு எளிய “முதல் நோக்கமான” செய்தியாக இருப்பதில்லை என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.[7] ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களின் விசுவாசம் உலகமுழுவதிலும் அறியப்பட்டிருந்தது (1:8). அவர்கள் “சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர் களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிரு”ந்தனர் (15:14). வசனம் என்பதன் “பால்” (அதாவது சுலபமாக ஜீரணிக்கப்படுவது) அல்ல, ஆனால் “பலமான ஆகாரமே” (சுலபமாக ஜீரணிக்கப்படாதது) அவர்களின் தேவையாக இருந்தது (எபிரெயர் 5:12ஐக் காணவும்). புதிய ஏற்பாட்டில் உள்ள புத்தகங்களில் ஏதாவது “பலமான ஆகாரமாக” தகுதியுள்ளதென்றால், அது ரோமருக்கு எழுதிய நிருபமே ஆகும். சார்லஸ் ஸ்விண்டால் என்பவர், இது “ஆத்துமாவிற்கான இலேசான சிற்றுண்டியல்ல,” ஆனால் அதற்கு மாறாக “ஒரு முழுமையான உணவாக” உள்ளது என்று கவனித்துள்ளார்.[8]

மேலும், ரோமருக்கு எழுதிய நிருபம் பவுலின் மற்ற பல நிருபங்களைப் போன்று [சபைக்கு] உள்ளாக இருந்த பிரச்சனைகளைக் கையாள்வதற்காக எழுதப்படவில்லை. ரோமாபுரியில் இருந்த சபையில் புறஜாதியார் மற்றும் ரோமர் என்ற இருசாராருக்கும் இடையில் மன இறுக்கம் இருந்திருக்கலாம். அப்படியென்றால், பவுலின் விவாத வரிகள் மன இறுக்கத்தைத் தளர்த்த நம்பிக்கை நிறைந்த வகையில் உதவி இருக்கலாம் - ஆனால் அந்தச் சூழ் நிலையைக் கையாளுதல் என்பது அவரது முதன்மை நோக்கமாக இருக்க வில்லை.

கடைசியாக, இந்த நிருபத்தை எழுதுவதற்கு, (சில எழுத்தாளர்கள்

முடிவு செய்வது போன்று) பவுல் தமது ஸ்பானியா நாட்டுப் பயணத்திற்கு உதவி பெறுவதை முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. ரோமா புரியில் இருந்த சபை தமக்கு உதவும் என்று பவுல் நம்பினார் என்பது உண்மையே (15:24). இருப்பினும், இந்த நிருபத்தின் மூலமாக அவர் நிதி உதவி பெறுவதை மாத்திரமே நோக்கம் கொண்டிருந்தார் என்றால், அவர் தமக்கு ஏற்கனவே நன்கு பழக்கமானதும் தமது ஊழியத்தில் நிலைநாட்டப் பட்டதுமான சபைக்குழுமங்களில் இருந்து அதைப் பெற்றிருக்க அதிக வாய்ப்பு இருந்தது.

பின்பு, இந்த நிருபத்தைப் பவுல் எழுத அவரது நோக்கமாக இருந்தது என்ன? ரோமருக்கு எழுதிய நிருபம் ஒரு போதனைப் பதிவேடாக உள்ளது. ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் "ஸ்திரப்படும்படி" (1:10) அவர்களைச் சந்திக்க விரும்பியதாகப் பவுல் கூறினார். போதனையின் மூல மாக என்பது அவர்களை அவர் "ஸ்திரப்படுத்தும்," அல்லது பலப்படுத்தும், ஒரு வழியாக இருக்கும் (16:25, 26; நடபடிகள் 18:23; மத்தேயு 28:20 ஆகிய வசனங்களைக் காணவும்). (முன்பே குறிப்பிட்டபடி) அவர் ரோமா புரிக்கு ஒருக்காலும் வந்து சேரமாட்டார் என்ற தனித்துவமான சாத்தியக் கூறு இருந்தபடியால், அவர் அதேவிதமான நோக்கத்தை நிறைவேற்றும் கடிதம் ஒன்றை அனுப்பினார். மெரில் C. டென்னீ என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> ரோம நிருபம், ... கொரிந்தியர் நிருபத்தைப் போலின்றி, சத்தியத்தைப் போதித்தலுக்கு என்பதைக் காட்டிலும் அதிகமாகத் தவறுகளைத் திருத்துவதற்காகக் கொடுக்கப்படவில்லை. இந்த நிருபமானது கிறிஸ்தவ சிந்தனையின் எல்லாத் துறைகளையும் உள்ளடக்குவதில்லை என்றாலும் - பரவசநிலை ["கடைசி விஷயங்கள்" பற்றிய படிப்பு] என்பது குறிப்பிடத்தக்க வகையில் குறைவுபட்டுள்ளது[9] - இது பவுலின் வேறெந்த நிருபங்களைக் காட்டிலும் - ஒருவேளை எபேசியர் நிருபத்தைத் தவிர்த்து - கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப் பகுதி பற்றிய மிகவும் முறையான கண்ணோட்டத்தைத் தருகிறது. பவுலின் நிருபங்களில் பெரும்பான்மையானவை இயல்பில் முரண்பாடுள்ளவையாகவோ அல்லது திருத்துவதாகவோ உள்ளன; ரோமருக்கு எழுதிய நிருபம் பிரதானமாக அறநெறி சார்ந்ததாக [அறிவுறுத்துதல் தருவதாக] உள்ளது.[10]

மோசஸ் E. லேர்டு என்பவர், நோக்கம் பற்றிய கேள்வியானது "நிருபத்தின் பொருளடக்கத்தினால் மிகச்சிறந்த வகையில் பதில் அளிக்கப் பட்டுள்ளது. இந்தப் பொருளடக்கங்கள் எந்த செயல்விளைவை உண்டாக்கும்படி வடிவமைக்கப்பட்டிருந்தாலும், அதுவே இந்த நிருபம் எழுதப்பட்டதற்கான நோக்கமாக உள்ளது" என்று கருத்துத் தெரிவித்தார்.[11] J. D. தாமஸ் என்பவர், இந்தப் புத்தகம் "எல்லாக் காலத்திற்குமான அடிப் படைக் கிறிஸ்தவத்தை வரைக்குறிப்பிடுகிறது" என்று கூறினார்.[12] வலியுறுத் தத்திற்காக நான் தாமஸ் அவர்களின் வார்த்தைகளைத் திரும்பக்கூற அனுமதியுங்கள்: ரோமருக்கு எழுதிய நிருபம் எல்லாக் காலத்திற்குமான

அடிப்படைக் கிறிஸ்தவத்தை வரைகுறிப்பிடுகிறது.

ரோமாபுரியின் முக்கியத்துவத்தை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு புறத்தில், பவுல் அந்த நகரத்திற்குச் சென்று சேர்ந்திருந்தால், அவரும் அவரது உடன் ஊழியர்களும் ரோமப் பேரரசின் மேற்குப் பாதிக்குச் சென்று சேரமுடிவதற்கு அதை அவர் ஊழியத்தின் மைய நகராக்கத் திட்டமிட்டிருக்கலாம். அவர் ரோமருக்கு எழுதிய நிருபம், இதற்காக வழியை ஆயத்தம் பண்ணுவதாயிருக்கும். இன்னொரு புறத்தில், பவுல் ரோமாபுரிக்குச் சென்று சேராதிருந்தால், புறஜாதியார் உலகத்தின் தலைநகரில் கிறிஸ்தவத்தின் இயல்பு பற்றிய (ஏவுதல் பெற்ற) தமது புரிந்துகொள்ளுதலின் எழுதப்பட்ட விளக்கம் ஒன்றை வைத்திருத்தலில் மதிப்பு இருக்கும்.

பவுல் தாம் எல்லாக் காலத்திற்குமான அடிப்படைக் கிறிஸ்தவத்தை வரைகுறிப்பிடுவதை உணர்ந்து அறிந்திருந்தாரா? அநேகமாக இல்லை என்றே சொல்லலாம், ஆனால் ஆவியானவரின் விருப்பநோக்கம் அதுவாக இருந்தது என்பது தெளிவு - அதை ரோமருக்கு எழுதிய நிருபம் நிறைவேற்று கிறது. R. C. பெல் என்பவர் இதை, “கிறிஸ்தவத்தின் வேரில் இருந்து கனி வரையிலான ஒரு சுருக்கமான கூற்று” என்றழைத்தார்.[13]

## இதன் பின்னணி என்னவாக இருந்தது?

நமது ஆயத்தப்படுதலின் ஒரு பகுதியாக, நாம் பவுலினால் உரைக்கப்பட்ட பிரச்சனையை முன்னெதிர் நோக்குதல் அவசியமாக உள்ளது. பிரச்சனைகளின் பல வகைகளைப் பட்டியலிட முடியும் - அவற்றில் சில எழுத்தாளரின் கருத்துநோக்கில் இருந்தும், சில [இந்த நிருபத்தை] பெற்றுக்கொள்பவர்களின் கருத்துநோக்கில் இருந்தும் வந்தவையாகும் - ஆனால் பவுல் அக்கறை கொண்டிருந்த பின்னணிப் பிரச்சனையே எனது உடனடி ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் ஒரு கிறிஸ்தவரின் உறவுமுறை என்பதே கீழிருந்த பிரச்சனையாக இருந்தது என்று நான் கருத்துத் தெரிவிக்கும்போது எவரொருவரும் என்னை மிக அதிகமாக கருத்தெளிமை கொண்டவன் என்று நினைக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். சில கிறிஸ்தவ யூதர்கள் (நாம் இவர்களை “யூதத்துவப் போதகர்கள்” என்று அழைப்போம்), இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகளுடன் கூடுதலாகப் புறஜாதிக்கிறிஸ்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் கடைப்பிடிக்க வேண்டியிருந்ததாகப் போதித்துக் கொண்டிருந்தனர். இது ஒரு புதிய பிரச்சனையாக இருக்கவில்லை; இதைப் பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் கையாண்டிருந்தார்.

ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுலின் அடிப்படைப் பதிலானது கலாத்தியருக்கு எழுதிய நிருபத்திலிருந்தது போன்றதாகவே இருந்தது: நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாக்கப்படுவதில்லை (ரோமர் 3:20ஆவைக் காணவும்). இருப்பினும், பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் தமது பதிலை விரிவாக்கினார். கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில், அவர் நியாயப்பிரமாணம் நிரந்தரமானதல்ல, அது தற்காலிகமானது என்று வாதிட்டார். ரோமருக்கு எழுதிய நிருபத்தில் அவர் அதே சத்தியத்தைப்

*போதித்தார் (7:1-4ஐக் காணவும்) ஆனால் அந்த விஷயத்தை இன்னும் சற்றுத் தூரம் எடுத்துச் சென்றார்: நம்மை இரட்சிப்பதற்கு எந்தப் பிரமாணமும் போதுமானதாக இராததால், நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக்கப்பட முடியாது. நாம் இரக்கத்தையும் கிருபையையும் பெற்றிருக்க வேண்டும், இல்லையென்றால் நமக்கு நம்பிக்கை இல்லை! நமது இரட்சிப்பிற்கு விசுவாசம் ஒன்று மாத்திரமே அனுமதிக்கப்படக் கூடியதாக உள்ளது - ஏனெனில் நாம் நமது கிரியைகளின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டிருந்தால், நமது இரட்சிப்பு கிருபையினால் ஆனதாக இராது (11:6ஐக் காணவும்) என்று அவர் முடித்தார்.*

*இந்த வேளையில் நீங்கள் பவுலின் சிந்தனையின் கருத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்க்கின்றேனா? இல்லை, அப்படியல்ல, ஆனால் நீங்கள் அதைப்பற்றி அறிந்திருக்கும்படியாக நான் அவற்றைச் சுருக்கமாக வரைக்குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் அதைப்பற்றி இப்போதே முற்றிலுமாக அறிந்துகொள்ள வேண்டும் என அதிக அக்கறை கொள்ள வேண்டாம். ஆனால் நீங்கள் நிருபத்தைத் தொடர்ந்து வாசிக்கும் போது நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.*

## இதன் முக்கியத்துவம் பற்றிய விஷயம் என்ன?

*ரோமருக்கு எழுதிய நிருபத்தில் "கிறிஸ்தவத்தின் இதயத்துடிப்பு" அடங்கியுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பைப் பற்றித் திரளான சாட்சியங்கள் தரப்பட முடியும். சாமுவேல் டெய்லர் கூல்ரிட்ஜ் என்பவர் இந்தப் புத்தகத்தை "இருப்பவற்றிலேயே மிகவும் ஆழ்ந்தறிவுள்ள பணி" என்று அழைத்தார்.[14] அலெக்சாண்டர் கேம்ப்பெல் என்பவர், ரோமருக்கு எழுதிய நிருபத்தின் செய்தியானது பவுலின் எல்லா நிருபங்களுக்கும் திறவுகோலாகிறது என்று கூறினார்.[15] டென்னி என்பவர் இதை "கிறிஸ்தவ இறையியலின் பிரதான ஊன்றுகம்பி" என்று குறிப்பிட்டார்.[16] அகுஸ்தீன், லூத்தர், மற்றும் மூடி போன்ற மதத்தலைவர்கள், ரோமருக்கு எழுதிய நிருபம் தங்கள் வாழ்வை இயக்கும் சக்தியாக இருந்தது என்று உரிமைகோரினர். எட்வர்டு ஃபியூட்ஜ் என்பவர் இந்த நிருபத்தை "சபை வரலாற்றை வடிவமைப்பது" என்று அழைத்தார்.[17]*

*இது ரோமருக்கு எழுதிய நிருபம் புதிய ஏற்பாட்டின் மற்ற எல்லாப் புத்தகங்களும் புறக்கணிக்கப்பட வேண்டும் என்ற அளவுக்கு எல்லா வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறுவதல்ல. ஜேம்ஸ் பர்ட்டன் காஃப்மென் என்பவர், "பரிசுத்த எழுத்துக்களின் ஒரு பகுதியை இன்னொரு பகுதிக்கு மேலாக உயர்த்துதல் என்பது எப்போதுமே அபாயமானதாக உள்ளது, ஏனெனில் அவ்வாறு செய்வதில், தேவனுடைய வெளிப்படுத்துதலின் ஒருமைப்பாடு தொந்தரவு செய்யப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.[18] டக்ளஸ் J. மூ என்பவர், "கிறிஸ்தவ இயல் [கிறிஸ்துவின் வாழ்வு, பண்பு, மற்றும் அவரது இயல்பு], அல்லது பரவசவியல் [இரண்டாம் வருகை உட்பட 'கடைசி விஷயங்கள்' பற்றிய படிப்பு] அல்லது பிரசங்கவியல் [சபை மற்றும் தேவனுடைய நித்திய திட்டத்தில் அதன் {சபையின்} இடம் (எபேசியர் 3:10, 11ஐக் காணவும்) பற்றிய குறிப்பிடத்தக்க கலந்துரையாடல்"*

என்பவை ரோமருக்கு எழுதிய நிருபத்தில் காணப்படுவதில்லை என்று சுட்டிக்காண்பித்தார்].[19]

ரோமருக்கு எழுதிய நிருபம் சகலத்திலும் முக்கியமானதாக இருப்பதில்லை, ஆனால் அது முக்கியமானது - மிகவும் முக்கியமானது. ஆண்டர்ஸ் நைக்ரென் என்பவர் இதை “பவுலின் சுவிசேஷம்” என்று கருதினார்.[20] ஜான் R. W. ஸ்டாட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> ரோமருக்கு எழுதிய நிருபம், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவ சுவிசேஷத்தின் முழுமையான மற்றும் சீரமைவான காட்சிப் படுத்துதலாக உள்ளது. இதில் அப்போஸ்தலரான பவுல் “தேவனு டைய ஆலோசனை முழுவதையும்” விரித்துரைக்கிறார். ... இங்கு தொடர்ந்து வரும் தலைமுறைகள் இதைப் பாராட்டவும் படிக்க வற்புறுத்தப்படவுமான ஒரு பெருமிதமும், புரிந்துணருதலும், அவரது விளக்கம் பற்றிய ஒரு தர்க்கரீதியான அமைவும் உள்ளது.[21]

கிறிஸோஸ்தோம் என்பவர் இந்த நிருபத்தைப் பவுலின் “ஆவிக்குரிய எக்காளம்” என்றழைத்தார்.[22] எக்காளங்கள் நமது கவனத்தை ஈர்ப்பதற்கான வைகளாக, நம்மை விழித்தெழுப்பக் கூடியவைகளாக உள்ளன!

பவுல் (மற்றும் தேவன்) ரோமருக்கு எழுதிய நிருபம் புரிந்து கொள்ளப்பட்டதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதே இந்த நிருபத்தின் தனிச்சிறப்பாக உள்ளது. ரோமருக்கு எழுதிய நிருபம் அச்சுறுத்துவதாக இருக்கக் கூடும். இது சிந்தனையின்றிப் பவுலினால் கிறுக்கப்பட்ட ஒரு வழக்கமான/ சாதாரணமான கடிதமாகவோ, மதரீதி யான கட்டுரையாகவோ இருப்பதில்லை. ரோமருக்கு எழுதிய நிருபத்தின் மிகக் கடினமான வசனப்பகுதிகளுடன் நீங்கள் போராடிய பின்பு, பவுலின் நிருபங்கள் “அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது” என்று பேதுரு கூறியபோது (2 பேதுரு 3:16) அவர் தமது சிந்தையில் இந்தப் பதிவேட்டைக் கொண்டிருந்தார் என்று நீங்கள் முடிவு செய்யலாம். ஹென்றி H. ஹேலி என்பவர், ரோமருக்கு எழுதிய நிருபம் புரிந்துகொள்ளக் கடினமா யிருப்பதற்கு இரு காரணங்களைக் கருத்தாகத் தெரிவித்தார்:

> ஒன்று பவுலின் எழுத்திலக்கிய நடை. அவர் ஒரு வாக்கியத்தைத் தொடங்கிவிட்டுப் பின்பு, அதில் சில விகுதிகள், சொற்றொடர்கள் ஆகியவை உடனடியாகத் தொடர்ந்து வருபவற்றை மாற்றியமைப் பதற்கு பதிலாக, பின்னோக்கிச் சென்று மாற்றியமைத்து, தொடர்பைக் காணுதலைக் கடினமாக்கும் அளவுக்கு விலகி, விலகி, விலகிச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். இந்த நிருபம் ஒரு பிரச்சனையைப் பற்றிய ஒன்றாக உள்ளது. இது நமக்குப் பிரச்சனையே அல்ல, ஆனால் அந்த நாட்களில் உயிருள்ள பற்றியெரியும் பிரச்சனையாக இருந்தது என்பது இன்னொரு காரணமாகும்: அதாவது, புறஜாதியார் ஒருவர் யூதமார்க்கத்து அமையாமலே கிறிஸ்தவராக முடியுமா என்ற பிரச்சனை.[23]

நாம் மூன்றாவது காரணம் ஒன்றைக் கூட்டலாம்: நம்மில் பலர் மிக அதிகமான சிந்தனையைக் கேட்டுக்கொள்ளும் வேலைகள்மீது அதிகம் விருப்பம் கொள்வதில்லை. ரோமருக்கு எழுதிய நிருபம் ஒரு புதிராக இருக்க முடியும். நம்மில் இரட்சிக்கப்படுவதற்கு மக்கள் சிலவற்றைச் செய்தாக வேண்டும் என்று நம்புகிறவர்கள் (நடபடிகள் 2:37, 38), இரட்சிப்பு என்பது "கிரியை செய்யாமல் ... விசுவாசம் வைக்கிறவர்களுக்கு" [தரப்படுகிற] கொடையாக உள்ளது (ரோமர் 4:5) என்று கூறுகிற வசனப்பகுதிகள் கலக்கம் அளிப்பவையாகக் காணப்படலாம். ரோமருக்கு எழுதிய நிருபம், "விசுவாசத்தினால் மாத்திரமே" இரட்சிப்பு உள்ளது என்று போதிப்பதாக நம்புகிறவர்கள், தேவன் "அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்" (ரோமர் 2:6) என்று வாசிப்பது ஒத்திசைவற்றதாகக் காணக்கூடும். ரோமருக்கு எழுதிய நிருபம் சிந்தனையை - அதிக சிந்தனையை, மும்முரமான சிந்தனையைக் கேட்கிறது. யூஜின் பீட்டர்ஸன் என்பவர் இந்நிருபத்தை "சிந்தனையில் ஒரு சாதனை" என்று அழைத்தார்.[24]

R. C. பெல் என்பவர், "இது சுவைக்க, அல்லது அவசரமாக விழுங்க மாத்திரமான ஒரு புத்தகமல்ல: இது 'மென்று மற்றும் ஜீரணிக்க' வேண்டிய புத்தகமாக உள்ளது ... ரோமருக்கு எழுதிய நிருபம், வாழ்வின் மிகுந்த ஆழமான, மற்றும் மிகுந்த உயரமான விஷயங்களைக் கற்றுக்கொள்வதில் மும்முரமும் ஆவலும், உண்மையும் கொண்ட மாணவர்களுக்கானதாக உள்ளது" என்று எழுதினார்.[25] பிரென்ட்டைஸ் மியடோர் என்பவர் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பிரசங்கத் தொடர் ஒன்றைத் தொடங்குகையில், "நாம் ஆழமற்ற நீர்நிலைகளில் இருக்கவில்லை; நமது தலைகளுக்கு மேல், பதினாறு அடிகள் உள்ள தண்ணீரில் இருக்கிறோம்!" என்று கூறினார்.[26]

இருப்பினும், நான் ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் புரிந்துகொள்ளுதல் சாத்தியமற்றதாக இருப்பதில்லை என்பதை வலியுறுத்தியாக வேண்டும். வாழ்நாள் முழுவதுமான படிப்பிற்குப் பின்னும்கூட, இந்நிருபத்தின் [சில] பகுதிகள் அர்த்தம் விளங்காதவையாக நிலைத்திருக்கும்; ஆனால் இதன் முக்கிய செய்தியை நீங்களும் நானும் புரிந்துகொள்ளக்கூடாதிருந்தால், இது நமக்காகப் பாதுகாக்கப்பட்டிராது.

இதன் போதனைகளை நமக்குரியதாக்கிக் கொள்வதற்கு அவசியமான முயற்சிகளை முன்வைக்க நமக்குப் பல காரணங்கள் உள்ளன. பேதுரு, பவுலின் எழுத்துக்களில் சில அறிகிறதற்கு அரிதாயிருப்பதாகக் கூறியது மட்டுமின்றி, ''கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும்'' அந்த எழுத்துக்களை ''தங்களுக்குக் கேடுவரத்தக்கதாகப் புரட்டுகின்றனர்'' என்றும் கூறினார் (2 பேதுரு 3:16). "விசுவாசத்தினால் மாத்திரமே" இரட்சிப்பு உண்டு என்று போதிக்க ரோமர் 1-4ஐப் பயன்படுத்துகின்றவர்களுக்கும், "ஜென்மப்பாவம்" பற்றிய போதனையை ரோமர் 5ல் காண்பதாக நினைப்பவர்களுக்கும், யுகத்துவ போதனைக்கு ரோமர் 9-11ஐ அடிப்படையாகக் கொள்பவர்களுக்கும் நாம் பதில் அளிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மிகமுக்கிய

மாக, நீங்களும் நானும், ரோமருக்கு எழுதிய நிருபம் நமக்குச் செய்யக்கூடியவற்றிற்காக, அதை புரிந்துகொள்வதற்குத் தேவையான யாவற்றையும் செய்வது அவசியமாக உள்ளது. நீங்கள் பவுலின் சிந்தனையினுடைய முக்கிய வரியைப் புரிந்துகொள்ள இயலும் - மற்றும் நீங்கள் அவ்வாறு புரிந்துகொள்ளும்போது, அது வாழ்வை மாற்றுவதாக இருக்கக் கூடும். "ரோமருக்கு எழுதிய நிருபத்தை நீங்கள் பற்றிக் கொண்டால், தேவன் உங்களைப் பற்றிக் கொள்கிறார்!" என்பது பெல் என்பவருக்குப் பிரியமான சொல்வழக்காகும்.[27]

## நாம் எதைக் கண்ணோக்க வேண்டும்?

**ஆய்வுக்கருத்துக் கூற்று(கள்)**

இந்த நிருபத்தில் உரைக்கப்பட்டுள்ள பின்னணிப் பிரச்சனையினுடைய இயல்பின் காரணமாக, ரோமர் 3:28, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் ஆய்வுக்கருத்தை விளக்கப்படுத்துகிறது என்று சிலர் வலியுறுத்துகின்றனர்: "ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்." ரோமர் 5:1 உட்படப் பிற வசனப்பகுதிகளும் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் பெரும்பான்மையானவர்கள், ஆய்வுக்கருத்தின் விளக்கம் என்ற வகையில், 1:16, 1:17, அல்லது இவ்விரண்டின் ஒன்றிணைப்பைத் தேர்ந்துகொள்கின்றனர்:

> கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று [ஆபகூக் 2:4ல்] எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது (ரோமர் 1:16, 17).

இருப்பினும், இவ்வசனங்களில் உள்ள திறவுகோல் வார்த்தையைக் குறித்து எழுத்தாளர்கள் கருத்து ஒருமைப்படுவதில்லை. சிலர் "சுவிசேஷம்" என்பதையும், சிலர் "விசுவாசம்," என்பதையும் இன்னும் மற்றவர்கள் "நீதி" மற்றும் "நீதிமான்" என்பவற்றை வலியுறுத்துகின்றனர். இவ்வார்த்தைகள் யாவையுமே முக்கியமானவைகளே; நீங்கள் வாசிக்கையில் இவற்றிற்காகக் கண்ணோக்குங்கள்.

**திறவுகோல் சிந்தனைகள்**

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர் ஒருவரின் புத்தகத்தில், அவர் தொடங்கும் வகையையும் முடிக்கும் வகையையும் ஒப்பிடுதல் என்பது அவரது அணுகுமுறையை எதிர்நோக்கும் ஒரு வழியாக உள்ளது. 1:1-6ல் மற்றும் 16:20-27 ஆகிய வசனப்பகுதிகளைக் கண்ணோக்குங்கள். இவ்விரண்டிலும் பொதுவாக உள்ள வார்த்தைகள், சொற்றொடர்கள், மற்றும் சிந்தனைகள் யாவை?

*ஒவ்வொரு பிரிவிலும் "கிறிஸ்து"வும் (1:4, 6; 16:10, 25, 27), "தேவனு"ம் (1:1, 4; 16:20, 26, 27) பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளனர். இவ்விரண்டுமே பவுலின் செய்தியினுடைய மையமாக உள்ளன. "சுவிசேஷம்" என்ற வார்த்தையும் (1:1; 16:25) "கிருபை" என்ற வார்த்தையும் (1:5; 16:24) காணப்படுகின்றன. இவைகள் திறவுகோல் வார்த்தைகளாக இருக்கும். ரோமர் 1:4, "இயேசுகிறிஸ்துவைக் குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே வாக்குத் தத்தம் பண்ணினதை"ப் பற்றிப் பேசுகையில், 16:26 "தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்க மாக்கப்பட்டதை"ப் பற்றிப் பேசுகிறது. நீங்கள் இதை வாசிக்கையில், பவுல் தமது விவாதத்தை உறுதிப்படுத்துவதற்குப் பழைய ஏற்பாட்டு மேற்கோள் களை எவ்வளவு அடிக்கடி சார்ந்திருந்தார் என்பதைக் கவனியுங்கள்.*

*1:6, 7 மற்றும் 16:26ல் மிகவும் வலிவார்ந்த இணைக் கருத்துகளில் ஒன்று காணப்படுகிறது. 1:6, 7ல், பவுல் புறஜாதியார்களை "[தேவன்] தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணும் பொருட்டு" தாம் அப்போஸ்தலத்துவத்தைப் பெற்றிருந்ததாக எழுதினார். 16:25ல் அவர் தமது பிரசங்கத்தின் மூலமாக, சுவிசேஷமானது "சகலஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது" என்று கூறினார். "புறஜாதியார்" (யூதரல்லாதவர்கள்) மற்றும் "ஜாதிகள்" என்பவை ஒரே கிரேக்க வார்த்தையில் இருந்து வருகின்றன. இந்நிருபம் முழுவதிலும் மூன்று செய்திகள் நூலிழைகள்போல ஊடோடுகின்றன:*

*(1) ஒரு இறையியல் செய்தி: "விசுவாசத்தின்" அடிப்படையிலேயே இரட்சிப்பு உண்டாகிறது.*

*(2) ஒரு நடைமுறைச் செய்தி: இந்த விசுவாசம் "கீழ்ப்படிதலில்" வெளிப்படுத்தப்பட்டுள்ளது. விலகிப்போன பாவியின் கீழ்ப்படிதல் குறிப்பிடப்பட்டுள்ளது (6:16, 17ஐக் காணவும்),[28] ஆனால் கிறிஸ்தவர்களிடத்தில் எதிர்பார்க்கப்படுகிற கீழ்ப்படிதல் இந்நிருபத்தின் பிற்பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ளது (அதி காரங்கள் 12-16).*

*(3) ஒரு உலகளாவிய செய்தி: இரட்சிப்பு "சகல இனத்தவருக்கு மானது." எல்லாரும் இழந்துபோகப்பட்டு, இரட்சிப்பு அவசிய மான நிலையில் இருக்கின்றோம். எல்லாருமே - கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு என்ற - ஒரே வழியிலேயே இரட்சிக்கப்படுவோம்.*

*டேல் ஹார்ட்மேன் என்பவருடைய கூற்றில் இருந்து ஒரு விளக் கத்தைத் தழுவியமைக்க என்னை அனுமதியுங்கள்.[29] 1:1-7ல், பவுல் ஒரு கருத்தைச் செலுத்தினார். 16:20-27ல், அவர் இன்னொரு கருத்தைச் செலுத்தினார். இவ்விரு கருத்துக்களுக்கும் இடையில், அவர் தமது விவாதங் களையும் முடிவுகளையும் தொங்கவிடுவதற்கு ஒரு கொடிக்கம்பியை இழுத்துக் கட்டினார்.*

***திறவுகோல் வார்த்தைகள்***

*ரோமருக்கு எழுதிய நிருபத்தில் தனிச்சிறப்பான பல வார்த்தைகளை நான் குறிப்பிட்டுள்ளேன். லேரி டீயெஸன் என்பவர் திறவுகோல் வார்த்தைகளைப் பட்டியலிட்டு அவைகள் எத்தனை முறை காணப்படுகின்றன என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.[30] பயன்படுத்தப்படுகிற வேதாகமத்தின் மொழிபெயர்ப்பைப் பொறுத்து எண்ணிக்கை வேறுபடுகிறது, ஆனால் டீயெஸனின் பட்டியலில் இருந்து வருகிற மாதிரியொன்று பின்வருமாறு:*

*"நீதி" (மற்றும் தொடர்பான வார்த்தைகள்) - 66 முறைகள்*
*"நியாயப்பிரமாணம்" - 75 முறைகள்*
*"விசுவாசம்," "நம்பிக்கை," "நம்புதல்" - 61 முறைகள்*
*"பாவம்," "பாவி," "பாவம் நிறைந்த" - 58 முறைகள்*
*"மரணம்," "மரித்தல்," "கொலைசெய்தல்" - 48 முறைகள்*
*"மாம்சம்," "மாம்சத்தின்படி," "மாம்சத்திலே" - 30 முறைகள்*
*"கிருபை" - 25 முறைகள்*
*"பரிசுத்தம்" (மற்றும் தொடர்பான வார்த்தைகள்). 25 முறைகள்*

*ரோமருக்கு எழுதிய நிருபத்தின் மீதான சில பாடங்கள் மேற்கண்ட மற்றும் பிற திறவுகோல் வார்த்தைகள் பற்றிய படிப்புகளுடன் தொடங்கு கின்றன. வசனப்பகுதிகளில் நாம் இவ்வார்த்தைகளை எதிர் கொள்ளுகையில், இவற்றைப் பற்றிக் கலந்துரையாடுவோம். இவ்வாறு, நாம் பவுல் தமக்கே உரிய ஆழ்ந்த நடைவகையில் தமது சிந்தனை வரியை எவ்வாறு மேம்படுத்தினார் என்று காண்போம்.*

## *நாம் இந்தப் புத்தகத்தை எவ்வாறு வரைகுறிப்பிட முடியும்?*

*பவுலின் பல நிருபங்கள், இறையியல் ("உபதேச") போதனையுடன் தொடங்கி நடைமுறைப் பயன்பாட்டுடன் முடிகின்றன. ரோமருக்கு எழுதிய நிருபமும் இவ்வாறே உள்ளது - ஆனால் இவ்விரு வலியுறுத்தங்களுக்கும் இடையிலுள்ள பிரிக்கும் இடம் எது என்பது பற்றி எழுத்தாளர்கள் கருத்து ஒருமைப்படுவதில்லை. உதாரணமாக, சிலர் 9 முதல் 11 வரையிலான அதிகாரங்களை இறையியல் பகுதியாக உள்ளடக்குகையில், மற்றவர்கள் இந்த அதிகாரங்களை நடைமுறைப் பகுதி என்று பெயரிடுகின்றனர். இன்னும் சிலர் 5ம் அதிகாரத்துடன் இறையியல் பகுதி முடிகிறது என்றுகூடக் கூறுகின்றனர்.*

*இந்த நிருபத்தை இரு சமமான பகுதிகளாகப் பிரித்தல் என்பது இதற்கு வரைகுறிப்பு ஏற்படுத்தும் எளிய வழிகளில் ஒன்றாக உள்ளது: முதல் எட்டு அதிகாரங்கள் (1-8) மற்றும் கடைசி எட்டு அதிகாரங்கள் (9-16). 1 முதல் 8 வரையிலான அதிகாரங்களில், பவுல் தமது அனுமானத்தை நிலைநாட்டினார்; 9 முதல் 16 வரையிலான அதிகாரங்களில், அவர் தமது*

*அனுமானத்தை நடைமுறைப்படுத்தினார். கடைசி எட்டு அதிகாரங்கள் தங்களுக்குள்ளே நியாயமாகவே இயல்பாய்ப் பிரிகின்றன. 9 முதல் 11 வரையிலான அதிகாரங்களில், பவுல் தமது அனுமானம் எவ்வாறு ஒப்புர வாக்கப்படக் கூடும் என்று விளக்கினார், இதை "யூதத்துவப் பிரச்சனை" என்று ஜிம் மெக்கைகன் அழைத்தார்.*[31] *12 முதல் 16 வரையிலான அதிகாரங்களில், அப்போஸ்தலர் தமது அனுமானத்தை அன்றாட வாழ்வின் அறைகூவல்களுக்கு நடைமுறைப்படுத்தினார். இந்த சிந்தனைகளை உள்ளிணைக்கும் வரைகுறிப்பு ஒன்று கீழே தரப்படுகிறது. நீங்கள் வாசிக் கையில் இந்த வரைகுறிப்பைக் கைக்கெட்டும் வகையில் வைத்துக் கொள்ளுங்கள். இதை மனப்பாடம் செய்துகொள்வது பயனுள்ளதாக இருக்கும்.*

## ரோமருக்கு எழுதிய நிருபத்தின் வரைகுறிப்பு

*அறிமுகம் (1:1-17)*

I. *போதனைப்பகுதி (1:18-8:39)*
   A. *ஆக்கினைத்தீர்ப்பு (1:18-3:20)*
      1. *புறஜாதியாருக்கு*
      2. *யூதருக்கு*
   B. *நீதிமானாக்கப்படுதல் (3:21-5:21)*
   C. *பரிசுத்தமாக்கப்படுதல் (6:1-7:25)*
   D. *மகிமைப்படுத்தப்படுதல் (8:1-39)*

II. *நடைமுறைப்பகுதி (9:1-15:13)*
   A. *விளக்கம் (9:1-11:36)*
      1. *விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற கருத்து, இஸ்ரவேல் மக்களுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தங்களுடன் ஒப்புரவாக்கப்படுதல்*
      2. *விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற கருத்து, தேவனுடைய உண்மைத் தன்மையுடன் ஒப்புரவாக்கப்படுதல்*
   B. *நடைமுறை (12:1-15:13)*

*முடிவுரை (15:14-16:27)*

*பல எழுத்தாளர்கள் தங்கள் வரைகுறிப்புகளில், ரோமருக்கு எழுதிய நிருபத்தில் திறவுகோல் வார்த்தைகள் என்று தாங்கள் கருதும் வார்த்தை களை உள்ளிணைத்திருக்கின்றனர். இங்கு [ஆங்கில மொழியில்] எதுகை பயன்படுத்தப்பட்டு, "நீதி" என்ற வார்த்தையைச் சித்தரிக்கும் வரைகுறிப்பு ஒன்றின் இருதயம் போன்ற மையப்பகுதி கீழே தரப்படுகிறது:*[32]

I. Sin *(பாவம்) (1:18-3:20): நீதி தேவைப்படுகிறது*
II. Salvation *(இரட்சிப்பு) (3:21-5:21): நீதி ஏற்பாடு செய்யப்படுகிறது*
III. Sanctification *(பரிசுத்தமாக்கப்படுதல்) (6:1-8:39): நீதி தரப்படுகிறது*
IV. Sovereignty *(ராஜரீகம்) (9:1-11:36): நீதி புறக்கணிக்கப்படுகிறது*
V. Service *(சேவித்தல்) (12:1-15:13): நீதி நடைமுறைப்படுத்தப்படுகிறது*

## முடிவுரை

*நாம் ஒன்றிணைந்து மேற்கொள்ளவிருக்கும் பயணத்திற்கென்று நமது மனங்களை ஆயத்தப்படுத்தவும் உங்களை உங்கள் சொந்தப் பயணத்திற்கென்று ஆயத்தப்படுத்தவும் இன்னும் அதிகமானவற்றைக் கூற முடியும், ஆனால் மேற்கூறப்பட்டவை இச்சமயத்திற்குப் போதுமானதாக இருக்க வேண்டும். நான் இப்பாடத்தில் ஊக்கமூட்டியவற்றை நீங்கள் வாசிக்கத் தொடங்குவதற்கு, இதுவே உங்களுக்கு ஏற்ற வேளையாக உள்ளது. உங்களுக்கு நேரம் கிடைக்கும் என்றால், இந்நிருபத்தை ஒரே அமர்வில் - பலமுறை - வாசித்துப் பாருங்கள்.*

*நான் வளர்ந்து கொண்டிருந்தபோது, சபையின் உறுப்பினர்கள் ஆராதனை ஊழியங்களில் கலந்து கொள்வதற்காகக் கணிசமான தூரம் அடிக்கடி பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஜெபத்தில் வழிநடத்து பவர்கள் கர்த்தரிடத்தில் ''பயணம் செய்வதில் இரக்கம்'' வேண்டி கேட்பதுண்டு: அதாவது, தேவன் ஒவ்வொருவருடைய வீடு திரும்பும் பயணத்தையும் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று ஜெபிப்பது உண்டு. ரோமருக்கு எழுதிய நிருபத்தின் ஊடாக, மன எழுச்சி மிகுந்த - ஆனால் அச்சுறுத்தும் - இந்தப் பயணத்தை நாம் தொடங்குகையில், "பயணம் செய்வதில் இரக்கம்" வேண்டி தேவனிடத்தில் கேட்கக்கடவோம்.*

*"ஆயிரம் மைல்களுக்கான பயணம் ஒன்று ஒற்றை அடியெடுப்பு வைத்தலைக் கொண்டே தொடங்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.[33] நாம் நமது அடுத்த பாடத்தில் அந்த முதல் அடியெடுத்து வைத்தலை மேற்கொள்வோம்.*

---

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*(1) ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய வகுப்பு ஒன்றை நீங்கள் போதித்தால், அநேகமாக நீங்கள் இதைப்போன்ற அறிமுக வகுப்பு ஒன்றை உள்ளடக்க விரும்புவீர்கள். ரோமருக்கு எழுதிய நிருபத்தினூடே நீங்கள் பிரசங்கிக்க முடிவுசெய்தால், உங்கள் பாடத்தொடரை அடுத்த பாடத்தைக் கொண்டு தொடங்க நீங்கள் தேர்ந்து கொள்ளலாம். ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய பல படிப்புகள், பவுலின் வாழ்வு, ஊழியம், மற்றும் பண்பு ஆகியவை பற்றிய ஆய்வுடன் தொடங்குகின்றன. உங்கள் போதனையைக் கவனிப்பவர், இந்த அப்போஸ்தலரை அறியாதவராக இருந்தால், நீங்கள்*

இந்தப் பாடத்திலோ அல்லது அடுத்த பாடத்திலோ அப்படிப்பட்ட ஆய்வு ஒன்றை உள்ளடக்க விரும்பலாம்.

(2) ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய இப்புத்தகங்களை நான் எழுதுகையில், பாடக்கருத்துகளுக்கு மூன்று பிரதான பயன்பாடுகளை என் சிந்தையில் கொண்டிருக்கிறேன். ஒரு சிலர் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பிரசங்கத் தொடரைப் பிரசங்கிப்பார்கள். பலர் வகுப்புகளில் ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் போதிப்பார்கள். மற்றவர்கள் தனிப்பட்ட பக்தி விருத்திக்காக இப்பாடங்களைப் படிப்பார்கள்.

ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் பிரசங்கிக்கப் போகிறவர்களுக்கு உதவுவதற்காக, வசனத்திற்குப் பின்பு வசனமாகப் படித்தலைச் செய்வதற்குப் பதிலாக, நான் தலைப்புகள் மற்றும் சிந்தனைகளின் அமைவு ஆகியவற்றில் பிரசங்க அணுகுமுறையைப் பயன்படுத்த முயற்சி செய்கிறேன். பிரசங்கித்தல் என்ற நோக்கங்களுக்குத் தகுதியானதைவிட அதிகமான தகவல்களை நான் உள்ளடக்குகிறேன். நீங்கள் பயன்படுத்துகிற பாடக் கருத்தில் தேர்ந்தெடுப்புடன் இருங்கள்.

ரோமருக்கு எழுதிய நிருபத்தை ஒரு வகுப்பில் போதிக்க இருப்பவர்களுக்கு உதவியாக, நான் வசனப்பகுதியை எடுத்துரைத்து முடிக்கவும் கேட்கப்படக்கூடிய கேள்விகளை முன்னெதிர் நோக்கவும் முயற்சி செய்கிறேன். இருப்பினும், இந்தத் தகவல்களில் சில உங்கள் மாணவர்களுக்கானதல்ல, ஆனால் உங்களுக்கானது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உதாரணமாக, உங்கள் வகுப்பில் பெரும்பான்மையானவர்கள் கிரேக்க வார்த்தைகளின்மீது ஆர்வமாய் இருக்க மாட்டார்கள். மேலும், நீங்கள் இந்தப் படிப்புகளில் இருந்து ஒரு மேற்கோளைப் பயன்படுத்தினால், அதைக் கூறியது யார் என்பதைக் குறிப்பிடத் தாமதித்தல் என்பது எப்போதும் அவசியமானதாகவோ அல்லது விரும்பப்படத் தக்கதாகவோ இராது.

இந்தப் புத்தகங்களை நீங்கள் உங்கள் சொந்தப் பக்திவிருத்திக்காகப் படித்தால், இந்தப் புத்தகங்களில் உள்ள ஒவ்வொரு விஷயமும் உங்களுக்கானதாகவே உள்ளது. நீங்கள் வாசிக்கும் எல்லாவற்றையும் வேதாகமத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்படி மாத்திரம் நான் உங்களை எச்சரிக்கை செய்கிறேன். இது தேவனுடைய வசனத்துடன் ஒத்துப்போனால், இதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். இது வசனத்திற்கு நேர்மாறாக இருந்தால், இதைப் புறக்கணித்துவிடுங்கள்.

---

குறிப்புகள்

[1]Charles Hodge, *Commentary on the Epistle to the Romans* (Princeton, N.J.: N.p., 1886; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1968), 9. [2]Quoted in Don DeWelt, *Romans Realized*, Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1959), 12. [3]Ibid. [4]ரோமருக்கு எழுதிய நிருபம் மற்றும் 1 கொரிந்தியர் நிருபம் ஆகிய இரண்டுமே பதினாறு அதிகாரங்களைக் கொண்டுள்ளன; ஆனால் எனது

NASB வேதாகமத்தில் ரோமருக்கு எழுதிய நிருபம் பதினைந்து பக்கங்களைக் கொண்டிருக்கையில், *1 கொரிந்தியர் நிருபம் பதினான்கு பக்கங்கள் நீண்டுள்ளது.* [5]Dave Miller, "The Meaning of Romans (1)," sermon presented on the *Truth in Love* television program, Fort Worth, Texas, 2 January 2002. [6]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 19. [7]*கல்வியாளர்கள், "பிரசங்கிக்கப்படுகிற" அல்லது "செய்தி" என்ற அர்த்தம் கொண்ட kerygma என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர். "முதல் நோக்கங்கள்" என்பது பற்றி எபிரெயர் 5:12ஐக் காணவும்.* [8]Charles R. Swindoll, *Coming to Terms with Sin: A Study of Romans 1-5* (Anaheim, Calif.: Insight for Living, 1996), 6. [9]Little mention is made of other key topics, such as the church and expressions of public worship. [10]Merrill C. Tenney, *New Testament Survey*, rev. Walter M. Dunnett (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 305.

[11]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), xx. [12]J. D. Thomas, *Romans*, The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 3. [13]Quoted in J. D. Thomas, Class Notes, *Romans*, Abilene Christian College (1955). [14]Samuel Taylor Coleridge, *Table Talk*, arr. and ed. T. Ashe (London: George Bell and Sons, 1896), 228. [15]Thomas, Class Notes. [16]Tenney, 306. [17]Edward Fudge, *Romans*, New Testament Helps (Athens, Ala.: C.E.I. Publishing Co., 1970), 12. [18]James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), vi. [19]Moo, 20. [20]Anders Nygren, *Commentary on Romans* (Philadelphia: Fortress Press, 1949), 2.

[21]Quoted in Larry Deason, *"The Righteousness of God": An In-depth Study of Romans*, rev. (Clifton Park, N.Y.: Life Communications, 1989), 6. [22]Chrysostom *Homilies on the Epistle to the Romans* Argument. [23]Henry H. Halley, *Halley's Bible Handbook*, rev. (Chicago: Henry H. Halley, 1955), 522. [24]Eugene H. Peterson, *The Message: New Testament with Psalms and Proverbs* (Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995), 359. [25]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 2. [26]Prentice Meador, "When in Rome," sermon preached at Prestoncrest church of Christ, Dallas, Texas, 1 October, 2000. [27]Quoted in Thomas, *Romans*, 3. [28]*இந்தக் கீழ்ப்படிதலில், சுவிசேஷத்தைக் கேள்விப்படுதல் (10:17), இயேசுவே உயிர்த்தெழுந்த கர்த்தரென்று விசுவாசித்து அறிக்கையிடுதல் (10:9, 10), பாவத்தி லிருந்து மனந்திரும்புதல் (2:4) மற்றும் ஞானஸ்நானம் பெறுதல் (6:3-6) ஆகியவை உள்ளடங்கியிருக்கின்றன.* [29]Dale Hartman, class taught at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 11 January 2004. [30]Deason,16.

[31]Jim McGuiggan, *The Book of Romans*, Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 5. [32]ரோமருக்கு எழுதிய நிருபத்தின் பல வரைகுறிப்புகள் "நீதி" என்ற வார்த்தையைச் சுற்றிச்சுழலுபவைகளாக உள்ளன. இந்த வரைகுறிப்பு, Warren W. Wiersbe, *Wiersbe's Expository Outlines on the New Testament* (Wheaton, Ill.: Victor Books, 1992), 359 என்ற நூலில் எழுதப்பட்ட வரைகுறிப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. [33]Lao-tzu (c. 604-c. 531 B.C.), *The Way of Lao-tzu*, quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown and Co., 1992), 57.

# Versions of the Bible Used in This Study

AB — Amplified Bible
CEV — Contemporary English Version
CJB — Complete Jewish Bible
Conybeare — The Epistles of Paul, by W. J. Conybeare
ESV — English Standard Version
Goodspeed — The New Testament, An American Translation, by Edgar J. Goodspeed
HCSB — Holman Christian Standard Bible
JB — Jerusalem Bible
KJV — King James Version
Knox — The New Testament in the Translation of Monsignor Ronald Knox
LB — Living Bible paraphrase
LNT — The Living New Testament
McCord — [Hugo] McCord's New Testament Translation of the Everlasting Gospel (The Freed-Hardeman Translation)
Moffatt — A New Translation, by James Moffatt
MSG — The Message paraphrase, by Eugene Peterson
NASB — New American Standard Bible
NCV — New Contemporary Version
NEB — New English Bible
NIrV — New International Readers Version
NIV — New International Version
NKJV — New King James Version
NLT — New Living Translation
NRSV — New Revised Standard Version
Phillips — The New Testament in Modern English, by J. B. Phillips
REB — Revised English Bible
RSV — Revised Standard Version
SEB — Simple English™ Bible
TEV — Today's English Version paraphrase
Weymouth — The New Testament in Modern Speech, by Richard Francis Weymouth